O.S.42/2019
PW1 – ருக்குமணி
நாள் 17.02.2026, 12.15 P.M.

**3ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

**1.** நிரூபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் தெரியுமா என்றால் எனது மகன் அதை வாசித்து பார்த்து விட்டு கையொப்பம் செய்ய சொன்னார். நான் கையொப்பம் செய்தேன். இந்த வழககை தாக்கல் செய்தது யார் என்றால் ராஜேந்திரன் மற்றும் ராஜாத்தி. ராஜாத்தி என்னுடைய அக்கா, ராஜேந்திரன் எனது அக்காவின் கணவர். என்ன பரிகாரம் கோரி வழககு தாக்கல் செய்தார்கள் என்று எனக்கு தெரியாது. இந்த சொத்தின் சர்வே எண். மற்றும் அளவு தெரியுமா என்றால் தெரியும். சர்வே எண் தெரியாது. சொத்தின் நான்குமால்கள் தெரியாது. நான் படிக்கவில்லை. எனது அப்பா பெயர் மாப்பிள்ளைசாமி. தாத்தா பெயர் பாக்கியம் கிருஷ்ணசாமி தேவர். எனது அக்காவின் மாமனார் பெயர் வேலுச்சாமி. வேலுச்சாமியின் அம்மா பெயர் குப்பம்மாள்.

2. குப்பமாளின் உடன் பிறந்தவர் தான் குமரைய்யாம்மாள், பாக்கியம் கிருஷ்ண சேர்வை என்றால் சரிதான். குமரைய்யாம்மாளின் மகன் தான் சாயல்குடி பெரிய ஜமீன்தார் என்றால் சரிதான். பெரிய ஜமீன் தாரின் மகன் தான் இளைய ஜமீன்தார் என்றால் சரிதான். பெரிய ஜமீன்தாரின் தாய் மாமா தான் எனது தாத்தா பாக்கியம் கிருஷ்ண சேர்வை என்றால் சரிதான். பெரிய ஜமீன்தாருக்கும் அவருடைய மனைவிக்கு பிரச்சனை இருந்ததாக கேள்விபட்டேன் என்றால் சரிதான். சொத்து பிரச்சனை சம்மந்தமாக இளைய ஜமீன்தார் பெரிய ஜமீன்தார் மீது வழக்கு தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். ஜமீன்தாரின் சொத்துக்களை சரிசமமாக பெரிய ஜமீன்தாரும் சின்ன ஜமீன்தாரும் பிரித்துக்கொண்டார்கள்.

3. சொத்து கிரையம் வாங்கும் போது பட்டா யார் பெயரில் இருந்தது என்று பார்த்து வாங்கினோமா என்றால் பெரிய ஜமீன்தார் பெயரில் தான் பட்டா இருந்தது. அந்த பட்டாவை இந்த வழக்கில் ஆவணமாக தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தை 1, 2 வாதிகள் கிரையம் வாங்கும் போது பட்டா எண்.1865 இளைய ஜமீன்தார் சிவஞானபாண்டியன் பெயரில் தான் இருந்தது என்றால் சரியல்ல. கிரையம் வாங்கிய பிறகு எந்த காலத்திலும் எனது அக்கா பெயரிலோ, அக்கா கணவரின் பெயரிலோ பட்டா மாற்றம் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. அந்த பட்டாவை இந்த

வழக்கில் தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை. தாவா சொத்தானது தற்போது இளைய ஜமீன்தார் அனுபவத்தில் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. எங்களுடைய அனுபவத்தில் இருந்து வருகிறது. அதில் தற்போது காட்டுகருவேல மரங்கள் வளர்ந்து உள்ளது. சுமார் 7,8 ஆண்டுகளுக்கு முன்பு பருத்தி விவசாயம் செய்தோம்.

4. விவசாயம் செய்தது சம்மந்தமாக அடங்கல் வாங்கியுள்ளோமா என்றால் வாங்கியுள்ளோம். அதை வழக்கில் தாக்கல் செய்துள்ளோமா என்றால் வழக்கறிஞர் வசம் கொடுத்துள்ளோம். அந்த இடத்தில் பயிர் செய்ததற்கான இழப்பீடு பெற்ற ஆவணத்தை வழக்கறிஞர் வசம் கொடுத்துள்ளோம். தாவா சொத்தானது 1,2 பிரதிவாதிகளுக்கு ஒரு போதும் உரிமையில்லை என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி கார்த்தியாயின் நாச்சியார் தாவா சொத்து சம்மந்தமாக கேரளாவில் பதிவு செய்த கிரைய ஆவணம் மோசடியானது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்தின் தற்போது சந்தை மதிப்பு எனக்கு தெரியாது. தாவா சொத்தானது தற்போது கோடிக்கணக்கில் மதிப்பு பெறும் என்பதால் இளைய ஜமீன்தாருக்கு பாத்தியமான சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் வாதியாகிய நாங்களும் 1,2 பிரதிவாதிகளும் கூட்டுச்சேர்ந்து பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

5. 1ம் வாதி எனது பெயரில் எழுதிக்கொடுத்த உயில் ஆவணத்தை நான் படித்துப் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. எனக்கு எழுதிக்கொடுத்த சொத்தின் நான்குமால்கள் எனக்கு தெரியாது. தாவா சொத்தானது எனது அனுபவத்திலோ, எனது சகோதரி அனுபவத்திலோ இல்லை என்பதால் தாவா சொத்தின் நான்குமால்கள் எனக்கு தெரியவில்லை என்றால் சரியல்ல. தாவா வழக்கானது தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

Sd/Sadhu Siva Subramanian,
District Munsif cum
Judicial Magistrate,
Kadaladi